# நீதிக்கட்சி

**ஆக்கம்**

**கோ.ஸ்ரீராம்**

## 1909

1909 இல் **பி. சுப்ரமணியம், எம். புருசோத்தம் நாயுடு** எனும் இரு வழக்கறிஞர்கள் **"சென்னை பிராமணரல்லாதோர் சங்கம்"** என்ற அமைப்பை உருவாக்கி அக்டோபர் 1909 க்கு முன்னர் ஆயிரம் பிராமணரல்லாத உறுப்பினர்களைச் சேர்க்கப்போவதாக அறிவித்தனர். ஆனால் பிராமணரல்லாத மக்களிடையே இதனால் எவ்விதத் தாக்கமும் ஏற்படவில்லை; இந்த அமைப்பும் நீர்த்துப் போனது.

## 1912

1. 1912 இல் **சரவணப் பிள்ளை, ஜி. வீராசாமி நாயுடு, துரைசாமி நாயுடு, எஸ். நாராயணசாமி நாயுடு** போன்ற பிராமணரல்லாதோர் தலைவர்கள் **"சென்னை ஐக்கிய சங்கம்"** என்ற அமைப்பை உருவாக்கினர்.
2. **நடேச முதலியார்** இதன் செயலாளராக இருந்தார்.
3. **அக்டோபர் 1, 1912** இல் இவ்வமைப்பு புனரமைக்கப்பட்டு **சென்னை திராவிடர் சங்கம்** என்று பெயரிடப்பட்டது. சென்னை நகரத்தில் பல கிளைகளைத் தொடங்கிய இச்சங்கத்தின் முக்கிய சாதனை பிராமணரல்லாத மாணவர்களுக்காக ஒரு விடுதியை நிறுவியது.

# 1916

1. டாக்டர் டி.எம்.நாயரும், வெள்ளுடை வேந்தர் என்று அழைக்கப்படும் சர். பிட்டி.தியாகராயரும் இணைந்து 20.1.1916 அன்று “தென்னிந்திய நல உரிமை சங்கம்”. நிறுவினர்.
2. பி. ராமராய நிங்கர் (பனகல் அரசர்) மற்றும் சி. நடேச முதலியார் போன்ற தலைவர்கள் இந்த அமைப்பு உருவாகக் காரணமாக இருந்தனர்.

# 1917

**நீதிக்கட்சியின் தோற்றம்**

1. 20.1.1916 தென்னிந்திய நல உரிமைச் சங்கம் என்ற அரசியல் அமைப்பும் உருவாக்கப்பட்டது. இதுவே 1917ல் நீதிக்கட்சி (ஜஸ்டிஸ் கட்சி) என்று பரவலாக அழைக்கப்படலாயிற்று.
2. அக்கட்சியின் கொள்கை பிரச்சாரத்திற்கு “ஜஸ்டிஸ்” என்ற ஆங்கில நாளேடு துவங்கப்பட்டது. அதன் முதல் ஆசிரியர் டாக்டர் நாயர். பிறகு இப்பத்திரிக்கையின் பெயரால் “ஜஸ்டிஸ் கட்சி” என்று அழைக்கப்பட்டது. தமிழில் “நீதிக்கட்சி” என்று அழைக்கப்பட்டது.
3. இதன் முதல் பதிப்பு பெப்ரவரி 26, 1917 இல் வெளியானது.
4. ஜூன் 1917 இல் **பக்தவத்சலம் பிள்ளையை** ஆசிரியராகக் கொண்ட **திராவிடன்** என்ற தமிழ் இதழையும் வெளியிடத் தொடங்கியது.
5. பின்னர் ஏ. சி. பார்த்தசாரதி நாயுடு ஆசிரியராக இருந்த **ஆந்திர பிரகாசிக்கா** என்ற நாளிதழையும் நீதிக்கட்சி வாங்கியது.

# 1920

1920-ஆம் ஆண்டு நவம்பர் 20-ம் தேதி நடந்த பொதுத் தேர்தலில் ஜஸ்டிஸ் கட்சி மாபெரும் வெற்றி பெற்று ஆட்சியமைத்தது. கட்சி தலைவரான சர். பிட்டி.தியாகராயர், தான் முதலமைச்சராகாமல் 17.12.1920 அன்று அ.சுப்பராயலு ரெட்டியாரை முதலமைச்சராக்கினார். ஆனால் சுப்பராயலு ரெட்டியார் அவர்கள் மரணம் அடைந்து விடவே 11.7.1921 அன்று பனகல் அரசர் முதல்வரானார்.

## 1936

1920-லிருந்து 16 ஆண்டுகள் தமிழகத்தில் மக்களிடம் செல்வாக்குடன் இருந்த நீதிக் கட்சிக்கு 1936-ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் வெற்றி வாய்ப்பு கிடைக்கவில்லை.

## 1938

தந்தை பெரியார் சிறையில் அடைக்கப்பட்டிருந்த நேரம். 1938 டிசம்பர் 29,30,31 ஆகிய தேதிகளில் சென்னையில் நடைபெற்ற நீதிக்கட்சியின் 14-வது மாகாண மாநாட்டில் "என் தோளுக்குச் சூட்டிய மாலையைப் பெரியாரின் தாளுக்குச் சூட்டுகிறேன்" என்று உணர்ச்சிப் பெருக்குடன் மேடையில் வைக்கப்பட்டிருந்த பெரியார் படத்திற்கு தமக்களித்த மாலையைச் சூட்டினார் சர்.ஏ.டி.பன்னீர்செல்வம். பின்னர், **நீதிக் கட்சியின் தலைவராக தந்தை பெரியார் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட,** மாநாட்டில் இருந்தவர்கள் அனைவரும் "உங்கள் உடல் சிறைப்படுத்தப்பட்டிருந்தாலும், உங்களின் வீரத் திருவுருவத்தின் முன் நாங்கள் அனைவரும் எழுந்து நிற்கிறோம்" என்று முழக்கம் எழுப்பினர்.

## 1944

நீதிக்கட்சியின் 16-ஆவது மாகாண மாநாடு சேலத்தில் நடைபெற்றது. **நீதிக்கட்சி "திராவிடர் கழகம்" என்று பெயர் மாற்றப்பட்டது**. இதற்காக சேலம் மாநாட்டில் கொண்டு வரப்பட்ட தீர்மானத்திற்கு "**அண்ணாதுரை தீர்மானம்**" என்றே பெயர்.

# நீதிக்கட்சி சாதனைகள்

1. செப்டம்பர் 16, 1921 இல் நீதிக்கட்சி அரசு முதல் வகுப்புவாரி பிரதிநிதித்துவ அரசாணையை (G.O 613) வெளியிட்டதன் மூலம் இந்திய சட்டமன்ற வரலாற்றில் முதன்முதலில் இட ஒதுக்கீடு முறையை அறிமுகப்படுத்தியது.
2. டிசம்பர் 18, 1922 இல் முதலில் அறிமுகப்படுத்தப்பட்டு 1925 இல் நிறைவேற்றப்பட்ட சென்னை இந்து சமய அறநிலையத்துறை சட்டம் பல இந்துக் கோவில்களை மாகாண அரசின் கட்டுப்பாட்டில் கொண்டு வந்தது. இச்சட்டமே சென்னை

மாநிலத்திலும் தமிழ்நாட்டிலும்இயற்றப்பட்டுள்ள பல இந்து அறநிலைய மற்றும் அறக்கட்டளை சட்டங்களுக்கு முன்னோடியாகும்.

3. 1919 இந்திய அரசுச் சட்டம், பெண்கள் சட்டமன்ற உறுப்பினர்களாவதைத் தடை செய்திருந்தது. முதல் நீதிக்கட்சி அரசு ஏப்ரல் 1, 1921 இல் இத்தடையை விலக்கியது. தேர்தலில் வாக்களிக்கவும், சட்டமன்ற உறுப்பினராகவும் பாலின அடிப்படையில் அமைந்த தகுதிகள் நீக்கப்பட்டன. இதன் மூலம் மருத்துவர் முத்துலட்சுமி ரெட்டி 1926 இல் சென்னை சட்டமன்றத்துக்கு நியமனம் செய்யப்படுவதற்கு வழி வகுத்தது.
4. 1922 இல் சட்டமன்றத்தில் தலித்துகளைக் குறிக்க “பஞ்சமர்” மற்றும் “பறையர்” போன்ற சொற்களைப் பயன்படுத்தக் கூடாதென்றும் ”ஆதி திராவிடர்” என்ற பெயரையே அதிகாரப்பூர்வமாகப் பயன்படுத்த வேண்டுமென்றும் நீதிக்கட்சி தீர்மானம் நிறைவேற்றியது
5. நீதிக்கட்சி கொண்டு வந்த சென்னை தொடக்கக் கல்வி சட்டம், 1920 ஆண் மற்றும் பெண் குழந்தைகளுக்குக் கட்டாயக் கல்வியை அறிமுகப்படுத்தியது
6. 1920 இல் நீதிக்கட்சி அரசு ஆதரவுடன் சென்னை மாநகராட்சியில் மதிய உணவுத் திட்டம் கொண்டுவரப்பட்டது.(சர். பிட்டி.தியாகராயர்) முதலில் **ஆயிரம் விளக்குப் பகுதியில்** இருந்த ஒரு மாநகராட்சிப் பள்ளியில் காலை உணவுத் திட்டமாக அறிமுகப்படுத்தப்பட்டது. பின் மேலும் நான்கு பள்ளிகளுக்கு விரிவு படுத்தப்பட்டது.
7. இத்திட்டமே1960களில் காமராசரால் அறிமுகப்படுத்தப்பட்டு எம்.ஜி.ராமச்சந்திரனால் 1980களில் விரிவுபடுத்தப்பட்ட சத்துணவுத்திட்டத்தின் முன்னோடியாகும்.
8. 1922 இல் இயற்றப்பட்டு 1935 இல் திருத்தப்பட்ட, தொழிற்சாலைகளுக்கு அரசு உதவிச் சட்டம், தொழிற்சாலைகளைத் தொடங்க கடனுதவி வழங்கியது.
9. மலபார் குத்தகைச் சட்டம், 1931 குத்தகைக்காரர்களின் உரிமைகளை வலுப்படுத்தியது
10. ஆந்திரப் பல்கலைக்கழக சட்டம் நவம்பர் 6, 1925 இல் நிறைவேற்றப்பட்டது. 1926 இல் ஆந்திரப் பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டு சி. ஆர். ரெட்டி அதன் முதல் துணை வேந்தரானார்.
11. புதிய பல்கலைக்கழகத்துக்கான சாத்தியக்கூறுகளை ஆராய மார்ச் 22, 1926 இல் சிவஞானம் பிள்ளையின் தலைமையில் தமிழ் பல்கலைக்கழகக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. இதன் பலனாக 1929 இல் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் துவங்கப்பட்டது.
12. அதிகரித்து வரும் மக்கள் தொகைக்குப் போதிய குடியிருப்பு வசதிகள் செய்து தரச் செப்டம்பர் 7, 1920 அன்று சென்னை நகரத் திட்டச் சட்டத்தை நிறைவேற்றியது

13. 1924 இல் ஆயுர்வேதம், சித்த, யுனானி மருத்தவ முறைகளை ஆராய்ந்து பரப்ப இந்திய மருத்தவப் பள்ளியை நீதிக்கட்சி அரசு நிறுவியது.
14. **தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்** (*Tamil Nadu Public Service Commission*- TNPSC) 1929இல் சென்னை மாகாண சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பெற்ற ஒரு சட்டத்தின் மூலம் ஒரு தலைவர் மற்றும் இரண்டு உறுப்பினர்களை கொண்டு உருவாக்கப்பெற்றது. அப்பொழுது இதன் பெயர் The Madras Service Commission.

கட்சித் தலைவர்களின் பட்டியல்

| **தலைவர்** | **பதவி துவக்கம்** | **பதவி முடிவு** |
|---|---|---|
| தியாகராய செட்டி | 1917 | ஜூன் 23, 1925 |
| பனகல் அரசர் | 1925 | டிசம்பர் 16, 1928 |
| பி. முனுசாமி நாயுடு | ஆகஸ்ட் 6, 1929 | அக்டோபர் 11, 1932 |
| பொபிலி அரசர் | அக்டோபர் 11, 1932 | டிசம்பர் 29, 1938 |
| ஈ. வே. ராமசாமி | டிசம்பர் 29, 1938 | 27 ஆகஸ்ட் 1944 |
| பி. ராமசந்திர ரெட்டி | 1944 | 1945 |
| பி. டி. ராஜன் | 1945 | ? |